## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No.31/2012 | Date : 24.03.2023 | DW2 |
|---|---|---|
| Name: மே.வை.சண்முகராஜா | S/o. **வையாபுரி** | |
| Evidence Recorded Time: 03.46 P.M. to 03.45 P.M. | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் தங்கவேலு கட்சியின் சேலம் மாவட்ட குழு செயலாளராக இருந்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் 2-ம் பிரதிவாதி வெற்றிவேல்ள மேட்டூர் நகர கொளத்தூர் ஒன்றிய குழு செயலாளராக இருந்தார் என்றால் சரிதான். 4 முதல் 6 பிரதிவாதிகள் அருணாசலம், வேல்முருகன், ஆறுமுகம் மேற்சொன்ன கட்சியின் மேட்டூர் நகர கொளத்தூர் ஒன்றிய குழு உறுப்பினராக இருந்தார்கள் என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதி மாவட்ட குழு உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் நான் கட்சியில் எந்த பொறுப்பிலும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கதவு எண்கள் வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் என்ன என்று தெரியுமா என்றால் 145 ஆகும். ஒரே கதவு எண் தான் இருந்ததா என்றால் ஆமாம். வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வழக்குரையில் எத்தனை கதவு எண்கள் காட்டப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் நினைவில்லை. நான் இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு முன்பு எந்த கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் வழக்கு சொத்தில் எப்போது கட்டிடம் கட்டப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் 1992 என்று வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. அதன் பிறகு எப்போது கட்டிடம் கட்டப்பட்டதாக வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால் முதலில் கட்டப்பட்டது 1996- என்றும், இரண்டவதாக 1998 என்றும் தற்போது சாட்சி சொல்கிறார். ஆனால் உண்மையில் கட்டிடம் 1995-ல் தான் கட்டப்பட்டது. மேற்படி நான் சொன்ன சங்கதிகளை பதிலுரையிலும், நான் தாக்கல் செய்த முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் என்னுடைய முதல் விசாரணையில் 1995 என்று கூறியுள்ளேன். 1992-ல் கட்சியில் நான் என்ன பதவியில் இருந்தேன்

என்றால் மாவட்ட குழு உறுப்பினராக இருந்தேன். 1996–ல் மேட்டூர் நகர கொளத்தூர் ஒன்றிய செயலாளராக இருந்தேன். 1998–ம் ஆண்டும் மேற்படி பதவில் தொடர்ந்து இருந்தேன். மேற்படி பதவிகளில் நான் இருந்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். கட்டிடங்களை கட்டியதற்கான கணக்கு வழக்குகளை இன்று வரை நீதிமன்றத்தில் நாங்கள் ஒப்படைத்துள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்பவை எல்லாம் வாதியிடமிருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் முதன் முதலில் 1996–ல் கட்டிடம் கட்டியதாகவும், 1998–ல் இரண்டாவது கட்டிடம் கட்டப்பட்டது என்றும், அவ்வாற இரண்டாவது முறையாக கட்டிடம் கட்டும் போது பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் கடையின் உரிமையாளர் 12 ஆண்டுகளுக்கு வாடமைக்கு இருந்து கொள்ளவேண்டியது என்றும், அந்த வகையில் அந்த கடன் கழித்து கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டது என்றால் சரியல்ல. போராட்டம் மூலமாகவும், உண்டியல் வசூல் மூலமாகவும் கட்டிடம் கட்ட பணம் திரட்டியதாக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. 1982–ல் நான் கட்சியில் சேர்ந்தேன். அதற்கான ஆவணங்கள் இல்லை என்றாலும் நான் 1988–ல் தான் கட்சியில் சேர்ந்தேன் என்றாலும் சரியல்ல. சொத்தை எந்த வருடம் வழக்கு சொத்து ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் 1984– இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும் 1974 லேயே ராஜகோபால் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. முதன் முதலில் வழக்கு சொத்து எப்போது ஆக்கிரமிப்பு செய்தது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராஜகோபால் எப்போது மால்கோவில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வாதி ராஜகோபால் தற்போதைய தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியை சார்தவர் ஆவார். 1965–ல் வாதி ராஜகோபால் மால்கோவில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி எப்போது கட்சியில் சேர்ந்தார் என்று எனக்கு தெரியாது, அவர் எனக்கு சீனியர், அவர் தீவிர கட்சி பணியாற்றுகிறார் என்பதால் அவரை மால்கோவில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்றால் சரியல்ல. அவர் எந்த ஆண்டு மால்கோவிலிருந்து வெளியேற்றபட்ட ஆண்டு என்ன என்றால் 1974 ம் ஆண்டு. கட்சி சம்மந்தமாக போரட்டங்களில் ஈடுபட்டதற்காக நீதிமன்றங்களில் வழக்கு நடைபெற்றதால் அது

சம்மந்தமாக பணியில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் அது தெரியாது. கட்சியில் சேர்ந்தது முதல் கட்சியின் முழு நேர ஊழியராக பணியாற்றி வந்தார் என்பதில் மாற்று கருத்து இல்லை. தன்னை முழுவதும் கட்சியில் இணைத்து கொண்டதால் தான்இருந்த இடத்தில் கட்சி பணி செய்வதும், கட்சி தொண்டர்களை சந்திப்பதும் என ராஜகோபால் செய்து வந்தார் என்றால் சரிதான். கட்சியின் தனியாக செலவுசெய்ய முடியாது என்ற காரணத்தினால்தான் தன்னுடைய குடியிருப்பை கட்சி கட்டிடமாக மாற்றி கட்சி பணி செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் மொத்தம் மூன்று கதவு எண் கொண்ட கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் இரண்டு கட்டிடங்கள் வாடகைக்கு விட்டும், ஒரு கட்டிடத்தில் வாதி குடியிருந்தும் வந்தார் என்றால் சரியல்ல. வாதி கட்சியில் சேலம் மாவட்ட பொது செயலாளராக பொறுப்பில் இருந்ததால் தன்னுடைய கட்டுப்பட்டின் கீழ் வரும் அமைப்புகளில் பொறுப்பில் உள்ளவர்கள் மீது வரும் புகார் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது பணி என்றால் சரியல்ல, கூட்டாகத்தான் முடிவு எடுக்கவேண்டும். அவ்வாறு காட்டுவதற்கு துணை விதி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுமக்கள் யாராவது புகார் கொடுத்தால் விசாரணை செய்வோமா என்றால் விசாரணை செய்வோம், ஆனால் அதனை செயற்குழு கூடிதான் முடிவு செய்யும். அதற்கான முதல் விசாரணை செய்வோமா என்றால் அதனை ஸ்தல ஒன்றிய கமிட்டி அமைத்து விசாரிப்போம், அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் எங்கள் கட்சியின் கொள்கை விளக்கத்திலேயே உள்ளது. பிரச்சனையின் தன்மையை பொறுத்து கமிட்டி முடிவு செய்யும். மாவட்ட செயற்குழுவிற்கு எந்த அதிகாரமும் இல்லை. வாதி சேலம் மாவட்ட குழு செயலாளராக பொறுப்பு வகித்தபோது கட்சியில் சேலம் மாவட்ட செயற்குழு, மாவட்ட குழு, ஒன்றிய குழு, வாலிபர் சங்கம் ஆகியவற்றில் இருந்த சில உறுப்பினர்கள் நில அபகரிப்பு, கட்சி நிதியை கையாடல் செய்தல், கலப்பட பெட்ரோல் விற்பனை செய்வது, இரண்டு திருமணம் செய்து கொள்வது, வரதட்சணை கொடுமை போன்ற புகார்கள் வந்ததாக வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு வந்தது உண்மைதான். அவ்வாறு புகார்களை யார் கொடுத்தார்கள் என்றால் பொதுமக்கள், கட்சி கமிட்டிகள், கொடுத்தார்கள். புகார் வந்ததற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மாவட்ட செயலாளர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டவர் என்றால்

சரிதான். சமூக விரோத, கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது வாதி நடவடிக்கை எடுத்ததால் வாதியின் மீது கொண்ட காழ்புணர்ச்சியல் வாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. அந்த சமயத்தில் மாநில செயற்குழு உறுப்பினராக ஆர்.செளந்திரராஜன் என்பவர் இருந்தார் என்றால் சரிதான் . ஒழுங்கு நடவடிக்கை உட்பட்ட கட்சி உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாதியிடம் தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தினார் என்றால் அவ்வாறு இல்லை. எனக்கு தெரியாத சங்கதிகளை தெரிந்தது போல வாதி காழ்புணர்ச்சி கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி ஊரில் கட்சியை கட்டிகாத்து வந்தார் என்றும் மேற்சொன்ன செளந்தரராஜன் சிறு சிறு குழுக்களை அமைத்து வாதிக்கு எதிராக துாண்டிவிட்டார் என்றால் அது வாதியின் கற்பனை கதையாகும். 24 மணி நேரமும் வாதியுடன் நான் இருந்ததாக சொல்வது பொய் என்றாலும் தனிப்பட்ட முறையில் நடைபெற்ற அனைத்தும் எனக்கு தெரியும் என்று சொல்வது நான் கூறும் கற்பனை கதை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 2003–ல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. 4 முதல் 6 பிரதிவாதிகள் கட்சியின் நிதியை கையாடல் செய்தார்கள் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் இல்லை. நாங்கள் அனைவரும் செளந்திரராஜனுக்கு வேண்டப்பட்ட நபர் என்றால் சரியல்ல. மேற்சொன்ன நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாதி காரணமாக இருந்தார் என்று நினைத்து 3, 4 பிரதிவாதிகள் வாதியின் மீது காழ்புணர்ச்சியோடு இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2010 முதல் மாவட்ட செயற்குழு தலைவராக இருந்தார் என்றாலும், 2012 முதல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை மாநில குழு மற்றும் மாவட்ட உறுப்பினராக வாதி இருந்தார் என்றால் சரியல்ல. வழக்கில் மொத்தம் எத்தனை அட்டவணை சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வாதியை அடுத்து மாவட்ட செயலாளர் பொறுப்பிற்கு வந்தவர் செளந்தரராஜன் துாண்டுதலினால் இந்த வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கட்சிக்கு எழுதி தரவேண்டும் என்று வாதியை நிர்பந்தித்தார் என்றாலும் ஆனால் வாதி கொடுக்க முடியாது என்றும் வாதியின் வாழ்நாள் வரையிலும் கட்சியின் கூட்டகளுக்காகவும், அலுவலகத்திற்கும் கொடுப்பதாக சொன்னார் என்றால் சரியல்ல. மாநில செயற்குழு உறுப்பினரும், கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு கட்சிக்கு சொத்தை எழுதிக்கொடுக்கும்படி

வாதியை நிர்பந்தித்தார்கள் என்றால் சரியல்ல. கட்சியின் மாநிலக்குழுவிற்கு தவறான செய்திகளை கொடுத்து வாதியின் மீதுபொய்யாக குற்றச்சாட்டுக்களை சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இரண்டு மாதங்களுக்கு முன்பு கட்சியில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. வாதி எப்போது கட்சியில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் 2010–ல் நீக்கப்பட்டார். ஒரு வருட வாடகையை ஏமாற்றி வாங்கியதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த புகாரை நான்தான் கொடுத்தேன். அதுசம்மந்தமான கணக்கு வழக்குகளை நானோ, எனக்கு முன்பு சாட்சி அளித்தவர்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. இதற்கு காரணமே மேற்படி சௌந்திரராஜனும், நாங்களும் தான் என்றால் சரியல்ல. பட்டாவில் உரிமையாளர் குறித்து என்ன பெயரில் உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வழகக்கு சொத்து குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் நினைவில்லை. கட்சியில் இருந்து வாதிக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கொள் என்றோ, அதில் கட்சி அலுவலகம் நடத்தி வா என்றோ தீர்மானம் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இதுவரை அவ்வாறு எந்த தீர்மானமும் கொடுக்கவில்லை. கட்சியின் டிரஸ்ட் பெயருக்கு வழக்கு சொத்தை எழுதி வைக்கும்படி செயற்குழு கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி வாதி ஒப்புக்கொண்டதாக ஆவணங்கள்ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எந்த தீர்மானும் நிறைவேற்ற வில்லை என்றாலும், அதை ஒப்புக்கொண்டு வாதி எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரத்தில் வாதி கொடுத்த நெருக்கடியால் தான் நான் கட்சியில் இருந்து வெளியேறியதாக நான் சொல்லவில்லை. எந்த ஆண்டிலிருந்து நான் கட்சியில் இருந்து வெளியில் வந்தேன் என்றால் 2008–ம் ஆண்டு கட்சி பொறுப்பில் இருந்து வெளியேறிவிட்டேன், கட்சியில் இருந்து வெளியேறவில்லை. அவ்வாறு நான் பொறுப்பில் இருந்து வெளியேறுவதற்கு என்ன காரணம் என்றால் வாதி வழக்கு சொத்தை கட்சி டிரஸ்டுக்கு கொடுக்க மறுத்ததால்தான் வெளியே வந்ததேன். 2008–ம் ஆண்டு முதல் வாதிதான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்று கட்சி செய்கிறார் என்றுதான் நான் கூறிவருகிறேன். மேற்சொன்ன காரணத்தை குறிப்பிட்டு வாதி அப்போது மாவட்ட பொறுப்பில் இருந்ததால் ராஜினாமா கடித்தை வாதியிடம்

கொடுத்துவிட்டு வந்தேன். அதுசம்மந்தமான ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். 2008–ல் வாதி மீது நான் ஏதேனும் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தேனா என்றால் அஜெண்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு எந்த அஜெண்டாவும் ஒப்படைக்கவில்லை என்றால் வழக்கறிஞரிம் கொடுத்துள்ளேன். வாதி சொத்தை அபகரித்ததாக நாங்கள் சொல்வதை பொறுத்து நீதிமன்றம் மூலம் வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. ஒருநபர் மீது புகார் இருக்கும் போது அந்த நபருக்கு பதவி உயர்வு கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. என் பேரில் வாதி நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. என் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. 2009–ல் மினர்வா கல்லூரியில் நான் நிர்வாககுழுவில் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்றேன் என்றால் சரிதான். மேற்படி நிர்வாக குழுவில் இருந்ததால் தான் நான் கட்சி பொறுப்பை விட்டு வெளியேறினேன் என்றால் அது பொய்யாகும். 2009–ல் மினர்வா கல்லூரிக்கு நிலம் வாங்கியது சம்மந்தமாக என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டா என்றால் இல்லை. நிலம் வாங்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் இல்லை, 22 பேரும் சேர்ந்துதான் செய்தோம். நிலம் வாங்கும் பொறுப்பை என்னிடம் கொடுத்ததை தவறாக பயன்படுத்தி என் மனைவி பெயரில் நிலம் வாங்கியதால் மினர்வா கல்லூரி தலைமை பொறுப்பில் இருந்து நீக்கினார் என்றால் சரியல்ல. 2012–ல் மினர்வாக கல்லூரி தலைமை பொறுப்பில்இருந்து நான் கருத்து வேறுபாடு காரணமாக நானே ராஜினாமா கொடுத்துவிட்டேன். என்னை யாரும் வெளியேற்றவில்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.